LIBRARY 6 NOV 1958 STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, the 18th March 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Smallpox

* 18 *S.N.Q.*—SRI A. VEDARATHNAM : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வேதாரண்யம் பகுதியில் அம்மை அதிகமாக பரவி வருகிறதா ?

(ஆ) அம்மை நோயால் உயிரிழுந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) அரசாங்கம் என்ன தடுப்பு நடவடிக்கை இது விஷயமாய் எடுத்துக் கொண்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) None.

(*c*) Vaccination and revaccination are done by the Public Health staff.

SRI A. VEDARATHNAM : தஞ்சரவூர் ஜில்லாவில் வேதாரண்யம் பகுதியிலும் இப்போது அங்கே புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் ராமகிருஷ்ணபுரம் காலனியிலும் மற்ற இடங்களிலும் அம்மை நோயினால் பல உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ற தகவல் அரசாங்கத்திற்கு வரவில்லையா ? பல உயிர்ச் சேதங்கள் ஏற்படும்வரையிலும்கூட அங்கே தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்ற தகவலும் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் அவருடைய கேள்வியில் குறிப்பிடும் விஷயம் எனக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது. தமது மூலக் கேள்வியில் வேதாரண்யம் சம்மந்தமாகத் தான் அவர் கேட்டிருந்தார். அந்தப் பகுதி சம்மந்தமாக விசாரித்ததில், யாரும் வைசூரி நோயினால் இறக்கவில்லை என்றும் ஒருவருக்கு வைசூரி நோய் கண்டதென்றும், அவர் இறக்கவில்லை என்றும், அவர் சிகிச்சை பெற்றார் என்றும் தகவல் வந்திருக்கிறது.

SRI M. D. THIAGARAJA PILLAI : தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள அனேக கிராமங்களில் இவ்வாண்டு வைசூரி நோயினால் அதிகமான உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக அந்த ஜில்லாவில் இந்த வருஷம் அதிகமான உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதைத் தடுப்பதற்கு அரசாங்கத்தார் தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மூலக் கேள்விக்கு பதிலளிக்கும்போது அங்கே வைசூரி நோயினால் ஒரு உயிர்ச்சேதம்கூட ஏற்படவில்லை என்று கூறினேன். கனம் அங்கத்தினர் பொதுப்படையான ஒரு கேள்வியைப் போடுகிறார். கனம் அங்கத்தினர் கோரும் தகவலுக்கு, தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI A. VEDARATHNAM : எந்தத் தேதி வரை இருந்த நில வரத்தைப்பற்றி தமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது என்று கனம் அமைச்சர் சொல்லவில்லை. ஆரம்பத்திலேயே, நான் முன்பு குறிப்பிட்ட அந்த ஒரு காலனியில் மாத்திரம் பல உயிர்ச் சேதங்கள் நிகழ்ந்திருக்கின்றன. மேலும் அந்தப் பஞ்சாயத்து எல்லைக்குள்ளும் பல உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அங்கே வைசூரி நோயினால் ஒரு உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை என்ற பதிலை கனம் மந்திரியிடமிருந்து கேட்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இந்த விஷயத்தில் கனம் மந்திரி அவர்கள் வேண்டிய கவனம் செலுத்துவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : 8-3-1958 வரை இருந்த நிலவரத்தைப்பற்றி எனக்கு தகவல் வந்திருக்கிறது. அந்தத் தகவலில், 16-11-1957-ம் தேதியுடன் முடிவடையும் வாரத்தில் ஒருவருக்கு வைசூரி கண்டதென்றும் ஒரு உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் வேறு விவரங்களை அறிய விரும்பினால், அதற்கு அவர் தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI M. JAGANNATHAN : தஞ்சாவூர் ஜில்லாவில், குறிப்பாக வேதாரண்யம், மாயவரம் பகுதிகளில், அடிக்கடி காலரா, அம்மை போன்ற வியாதிகள் பரவுகின்றன என்ற புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. அங்கே அந்த நோய்களைத் தடுப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : வீண் புகார்களை நாம் கவனிக்கவேண்டியதில்லை. ஆதார பூர்வமாகப் புகார் கூறினால் அதை கவனிக்கலாம்.

MR. SPEAKER : Let us take short notice question No. 19 afterwards.

Non-gazetted Officers

* 20 *S.N.Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any memorandum was presented by the Government to the Planning Commission making prpoosals for improving the scales of pay and emoluments of Non-gazetted Officers and the last grade staff of the State Government;

(*b*) whether a copy of the Memorandum will be placed on the Table of the House; and

(*c*) what reply was received from the Planning Commission?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) A ' note on disparity in scales of pay and dearness allowance between Central Government employees and State Government employees holding comparable posts ' with suggestions for its removal has been submitted to the Planning Commission for their consideration.

(*b*) Relevant extracts[a] from the note are being placed on the Table of the House;

(*c*) No reply has so far been received.

SRI M. KALYANASUNDARAM : நம் ராஜ்ய நிதி அமைச்சர் அவர்கள் திட்டக் கமிஷனுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில், மத்திய சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகிதங்களுக்கும் ராஜ்ய சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகிதங்களுக்கும் இடையே இருக்கும் ஏற்றத்தாழ்வுகளைப் போக்க வேண்டுமென்று கூறியிருப்பது ஒரு புறம் இருக்க, ராஜ்ய அரசாங்க

---

[a] Printed as Appendix I on pages 159-162 infra.